# திராவிடப் போராளிகள் 24

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## சுயமரியாதைக்கு இலக்கணம் வகுத்தவர்!



ஓவியம் : ரவிபேலட்

திராவிட இயக்க மேடைகளில், ஆண்களுக்கு நிகராக அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த இந்திராணி அம்மையார், குடும்ப வாழ்க்கையிலும் சுயமரியாதை கொள்கைப் பிடிப்பு கொண்டவராக வாழ்ந்தார்.

ஆணாதிக்கத்தினை நிலை நிறுத்தும் தத்துவங்களைப் பற்றிப் பேசாமல் மேலோட்டமான சடங்குகளை மட்டும் எதிர்க்கும் குரல்களைத்தான் பெண்ணுரிமையின் முன்னோடிகளாக தேசிய இயக்கங்கள், முன்னிறுத்தின. அந்தக் காலக்கட்டத்தில், பெண்ணடிமைத்தனம் என்பது குடும்பம், சாதி, மதம் என ஒன்றுடன் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு இருந்தது என்பதையும், அந்த நியாயமற்ற அமைப்பைக் காப்பாற்றும் கருவிகள்தான் கடவுள், புராணங்கள், சாஸ்திரங்கள் என்பதையும் அழுத்தமாகப் பேசியது சுயமரியாதை இயக்கம். யாரும் பேசுவதற்கே அஞ்சும் அந்தக் கருத்துகளை, அறிவுப்பூர்வமாக ஒரு தெளிந்த நீரோடை போல விளக்கிச் சொல்லும் ஆற்றல் பெற்றவராக இருந்தார் இந்திராணி அம்மையார்.

கருத்துச் செறிவினைப் போலவே அவர் உரை நிகழ்த்தும் பாங்கும் அணுகுமுறையும் குறிப்பிடத்தக்கவை. கூடியிருக்கும் கூட்டத்தில் எதிர்ப்பாளர்களை அடையாளம் கண்டு அவர்களது மனதைத் தொடுவதாக இந்திராணி அம்மையாரின் உரை அமைந்திருக்கும். சான்றாக, அவரது இரங்கூன் உரை நிகழ்ந்த இடம் ‘சாரத விலாச சங்கம்’. அங்கே இப்படித் தொடங்கியது அம்மையாரின் உரை.

“தோழர்களே! நடைப்பிணங்களாகிய, உரிமையற்ற அடிமைவாழ்வு படைத்த ‘காமக்கருவிகள்’ என்று சொல்லும்படியான இந்திய நாட்டிலுள்ள இந்துப்பெண் சமூகத்தைச் சேர்ந்த எனக்கு ‘பேசும் உரிமை’யையாவது அளிக்க உங்கள் மனம் இடம் கொடுத்ததற்கு முதலில் நன்றி செலுத்திவிட்டுப் பிறகு எனக்குக் கொடுத்திருக்கும் விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்கின்றேன்.”

பெண்ணை காமக்கருவியாகக் கருதும் சிந்தனையை முன்னேற்றம் அடைந்த நாடுகளின் தீவிரப் பெண்ணியவாதிகள்கூட, 1940-1950 கால கட்டங்களில்தான் எழுதியுள்ளனர். அதனை 1932-ஆம் ஆண்டிலேயே பேசினார் இந்திராணி அம்மையார்.

### சுயமரியாதைக்கு இலக்கணம்!

‘சுயமரியாதை இயக்கம் என்னதான் சொன்னது?’ என்று இப்போதும் கேட்பவர்கள் உண்டு. இந்திராணி அம்மையார் கூறுகிறார்:

“சுயமரியாதை இயக்கம், முதலாவதாக, நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் ஏதோ முன்னோர்கள் எழுதி வைத்துவிட்டார்கள் என்று குருட்டு நம்பிக்கையோடு இல்லாமல் நீங்கள் பகுத்தறிவைக் கொண்டு ஆழ்ந்து யோசித்து முடிவு கட்டுங்கள் என்று சொல்லுகின்றது.

> **“கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவருக்கும் நமக்கும் மத்தியில் தரகர் வேண்டாம்.”**

இரண்டாவதாக, ஆணுக்குப் பெண் அடிமை என்ற காலம் மலையேறி விட்டதென்று சொல்லுகின்றது. மூன்றாவதாக, பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பனை பண்ணாதே என்று சொல்லுகின்றது.

நான்காவதாக, மனிதர்களில் தீண்டாமை என்ற பேயை இந்த நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்று சொல்லுகின்றது.

ஐந்தாவதாக, கடவுள் பெயரைச் சொல்லி மதத்தின் பெயரைச் சொல்லிப் பிழைக்கும் பிழைப்பை அழிக்க வேண்டும் என்று சொல்லுகின்றது. ஆறாவதாக, கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவருக்கும் நமக்கும் மத்தியில் தரகர் வேண்டாம் என்கின்றது.

ஏழாவதாக, முதலாளி-ஏழைத் தொழிலாளி என்ற வித்தியாசம் வேண்டாம் என்கின்றது. அதாவது எல்லா மக்களும் ஏற்றத்தாழ்வு இல்லாமல், வேண்டிய அளவு உண்டு, உடுத்தி இருக்க வேண்டும். “*Necessaries for all and superfluity for None*” என்று சுயமரியாதை இயக்கத்தின் இலக்கணத்தையே படைத்துவிட்டார்.

### பெண் விடுதலை இயற்கையானது

இந்திராணி அம்மையாரின் உலக அறிவும் படிப்பறிவும் அவரது உரையில் ஒளிர்வதைப் படிப்பவர்கள் உணர முடியும். ஜே.கிருஷ்ணமூர்த்தி என்ற சிந்தனையாளர் **‘தியோசாபிகல் சொசைட்டி’**யில் ஆற்றிய உரை பற்றிக்கூட அம்மையார் குறிப்பிடுவார்.

1931-ஆம் ஆண்டு விருதுநகர் சுயமரியாதைப் பெண்கள் மாநாட்டில், அவர் ஆற்றிய தலைமை உரை அவரது சிந்தனை வளத்துக்குச் சான்று. “வானத்தில் மேகம் தவழ்வது போலவும், கடலில் அலை எழும்புவது போல வும், பறவை தன் அழகிய சிறகை விரித்துப் பறப்பது போலவும், பெண்மக்களுக்குத் தங்களுடைய உள்ளத்தி லெழும் விருப்பப்படி நடக்க உரிமை வேண்டும்”. பெண்ணின் விடுதலை என்பது யாராலும் வழங்கப்படுவதல்ல. அது இயற்கையானது, என்பதை இதைவிட அழகாகக் கூற முடியுமா?

அதேபோல் 19.6.1932 அன்று ‘புதுச்சேரி வாலிபர் சங்க மாநாட்டில்’ தலைமை உரை ஆற்றிய இந்திராணி அம்மையார், இளைஞர்களின் ஆற்றலை விளக்கி, “இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஜெர்மனியைக் கட்டி எழுப்பியவர்கள், ரஷ்யாவின் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து, சுயமரியாதைக் கொள்கையை நிலைநாட்ட லெனினுக்குத் துணை நின்றவர்கள், தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளை தென்னிந்தி யாவில் பரவச் செய்தவர்கள், உலகப் போரின் போது இங்கிலாந்தின் சுயமரியாதையைக் காப்பதற்கு, இலாயிட் ஜார்ஜுக்கு ஆதரவு கொடுத்தவர்கள், உலக சாரணர் இயக்கத்தின் நிறுவனர் பேடன் பவுலின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர்கள் அத்தனை பேரும் வாலிபர்களே” என்று எடுத்து வைக்கும் உரையில் அறிவும் அழகும் பின்னிக் கிடக்கும்.


### சுயமரியாதை ஜோடிப் புறாக்கள்

இத்தனைச் சிறப்புகளுக்குரிய இந்திராணி அம்மையார் இளமைக் காலத்திலேயே பெரியாரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு நிகழ்வுகளில் பங்கேற்றார். அவரது கணவர் பாலசுப்ரமணியம். பெரியார் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்ட அவர்கள் பகுத்தறிவு வானம்பாடிகளாக வாழ்ந்தார்கள். பாலசுப்ரமணியம் பின்னர் சிறைத்துறை அதிகாரியாகப் பணியாற்றினார். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் மீது கொலைப்பழி சுமத்தப்பட்டு சிறைச்சாலையில் இருந்தபோது, அவரைப் பரிவுடன் பாதுகாத்தவர் இவரே. பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின் அவரது பகுத்தறிவுக் கொள்கைகள் சற்றே தடுமாறின. அதனால் கோபம் கொண்ட இந்திராணி அம்மையார் ஒரே வீட்டில் இருந்தும்கூட கணவருடன் பேச்சு வார்த்தையின்றி வாழ்ந்தார். பின்னர் பாலசுப்ரமணியம் அவர்கள் தெளிவு பெற்று பெரியார் கொள்கைக்கு மீண்ட பிறகே அவருடன் இணைந்து வாழ்ந்தார்.

அவர்களது இந்தக் கொள்கைச் சண்டையை சமாதானம் செய்தவர், பெரியாரின் அன்புக்குரிய காயல்பட்டிணம் ஜக்கிரியா அவர்கள். இந்தச் செய்திகளை ஜக்கிரியா அவர்கள் மூலம் அறிந்து கொண்ட பெரியார் அவர்கள், இந்திராணி - பாலசுப்ரமணியம் அவர்களது கொள்கைப் பற்றினை நெகிழ்ச்சியுடன் பாராட்டினார். அதுபற்றி விடுதலை ஏட்டில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அக்கட்டுரையின் தலைப்பு ‘ஜோடிப் புறாக்கள்’. இத்தகைய சுயமரியாதை ஜோடிப் புறாக்கள் பறந்த வானம்தான் திராவிடம்.

(வருவார்கள்...)

## மாண்பைப் பேசும் திரை





இஸ்லாமிய வெறுப்பை முழுநேர தொழிலாகவே பரப்பிக் கொண்டிருக்கும் சக்திகளுக்கு எதிராக, அன்பை, மனித மாண்பைப் பேசும் படமாக கன்னடத்தில் வெளியானது **‘டேர் டெவில் முஸ்தபா’**. கதையின் களம் மிக எளிமையானது. ஆனால், அழுத்தமான விளைவுகளை உருவாக்கக்கூடியது.

இஸ்லாமிய மாணவர்களே இல்லாத கிராமத்துக் கல்லூரி ஒன்றுக்கு, முஸ்தபா என்கிற மாணவன் படிக்க வருகிறான். அவனை சக மாணவர்கள், கல்லூரிப் பணியாளர்கள், நிர்வாகம் ஆகியோர் அச்சம் கலந்த பார்வையுடனே அணுகுகின்றனர். ஆனால், தனது இயல்பான நடத்தை மூலம் அனைவரது பாராட்டுகளையும் பெறுகிறான் முஸ்தபா. இஸ்லாமியர்கள் என்றாலே இனம்புரியாத பயம், வெறுப்பு ஆகியவற்றைக் கொண்டிருந்தவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து, மத நல்லிணக்கம் குறித்து உணரும்விதமான திரைக்கதை.

மக்கள் ஒற்றுமையாக வாழ அன்பும், பரிவும் போதும் என்கிற இந்தத் திரைப்படத்துக்கு கர்நாடக மக்கள் மிகப்பெரிய வரவேற்பு அளித்துள்ளனர். கன்னடத்தில் வெளியான இந்தப் படத்துக்கு அம்மாநில அரசு, முழு வரிவிலக்கு அளித்துள்ளது. வெறுப்புப் பிரசாரப் படங்களை மக்கள் புறக்கணித்துவிடும் நிலையில், ஒற்றுமைக்கான கலைவடிவங்கள் மக்கள் மனதை வென்று விடுகின்றன.

## :ப்ளாஷ்பேக்



### தலைவரே அழைத்தார்!

என்னுடைய பதிமூன்று வயதில் கழகக் கொடி பிடித்து, 1967-ஆம் ஆண்டு தேர்தலில் கழகத்துக்காக வாக்கு சேகரிக்கச் சென்றேன். இளைஞர் அணிக்குப் பிறகு, தாய்க் கழகம் என பணியாற்றி வந்த நான், 2003-ஆம் ஆண்டு, ஏப்ரல் 6-ஆம் தேதி நமது இப்போதைய முதலமைச்சரை, அவர் இளைஞர் அணிச் செயலாளராக இருந்த போது சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பிரச்சாரத்துக்கு நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்துக்கு வருகை தந்திருந்தார். கழக வளர்ச்சி நிதியாக கையிலிருந்த 100 ரூபாயை அளிக்கத் தயங்கிய நிலையில், அவரே அருகில் அழைத்து, என்னைப் பற்றி விசாரித்து, நிதியையும் பெற்றுக்கொண்டார். புகைப்படமும் எடுக்கச் சொன்னார். இரண்டு நாள் கழித்து, ‘முரசொலி’யில் என் பெயரும் வந்திருந்தது. அது மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது.

**-எம். ஆர்.பன்னீர்செல்வம், தலைமைக் கழகப் பேச்சாளர், மூலக்காடு, மேட்டூர்.**



பன்னீர்செல்வம்

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணா வாரம்

**1963-ஆம் ஆண்டு, ஜூலை 15-ஆம் தேதி, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் குழு, முக்கிய முடிவை மேற்கொண்டது. அதன்படி அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை ‘இந்தித் திணிப்பு எதிர்ப்பு வாரமாக’ கொண்டாடும்படி கழகத்தின் எல்லா அமைப்புகளையும் கேட்டுக் கொண்டது. 1938-ஆம் ஆண்டு முதலே இந்தித் திணிப்பு எதிர்ப்பில் தீவிரம் காட்டிய அண்ணாவின் பிறந்த நாள், ‘இந்தித் திணிப்பு எதிர்ப்பு நாளாக’ வரலாற்றில் இடம்பெற வேண்டும் என அந்தக் குழு கூறியது. ஆனால், அதனை அண்ணா ஏற்கவில்லை. அந்த ஒரு வாரத்தில் மட்டும் எதிர்ப்பைக் காட்டிவிட்டு, பிறகு ஓய்ந்து விட்டால், என்ன செய்வது எனத் தயங்கினாலும், குழுவின் முடிவை வரவேற்றார். அவர் தொடங்கி வைத்த நெருப்பு இன்றும் அணையவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 162




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131